[1972 ஆகஸ்ட் 25

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) வேலாயுதம் பாளையம் கிராமத்தில் நொய்யலாற்றின் குறுக்கே ஒரு அணை கட்டி உங்கம்பாளையம அருகே வளையபாளையம் கிராமத்தில் ஒரு நீர்த் தேக்கம் அமைக்கும் திட்டம் திருச்சி மேற்பார்வைப் பொறியாளரின் விவரமான ஆய்வில் உள்ளது. ஆய்வு முடிந்து பரிசீலனை செய்தபின் ஒப்புதல் அளிப்பது பற்றி அரசு ஆலோசிக்கும்.

திரு வா. மை. அப்துல் ஜப்பூார் : கடந்த 25 ஆண்டுகளாக இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அரவக்குறிச்சி தொகுதியில் எவ்விதமான பாசனத் திட்டங்களும் நிறைவேற்றப்படாத காரணத்தால், இந்தத் திட்டம் மக்களுக்கு அதிகப் பலன் தருமென்ற காரணத்தால் விரைவில் இதை நிறைவேற்றித் தர அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா: நொய்யலாற்றின் குறுக்கே அணை கட்ட ஏற்கனவே பரிசீலிக்கப்பட்டு கைவிடப்பட்டிருக் கிறது. இப்போது இந்தத் திட்டத்தைப் பற்றி மறு பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. இந்த மறு பரிசீலனை முடிந்த பிறகு முடிவு எடுக்கப்படும்.

அரசினர் தோட்டத்தில் புதிய கட்டடம்.

* 346 வினு—திரு தோப்பூர் திருவேங்கடம், திரு ரா. ரா. முனுசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :—

சென்னை அரசினர் தோட்டத்தைச் சுற்றி அண்ணு சிலையை நோக்கி கடைகளை கட்டி வாடகைக்கு விடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : அண்ணு சிலையை நோக்கி, அரசினர் தோட்டத்தில் 10 அடுக்கு கட்டடம் கட்டும் திட்டம் பரிசீலனையிலுள்ளது. இத்திட்டத்தின்படி கீழ் பாகத்தில் கடைகளும், மேற்பாகத்தில் அரசின் அலுவலகங்களுமிருக்க திட்டமிடப்பட்டுள்ளது.

திரு நா. வீராசாமி : பத்து அடுக்கு மாடி ஒன்று கட்டுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னூர்கள். அதற்குப் பதிலாக அந்தத் தெரு முழுவதிலும் கடை கட்டினுல் 200 கடைகளுக்கு மேல் வரும். அதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு அரசாங்கத்திற்கு 10, 15 லட்ச ரூபாய் வருமானம் வரும். இதைப் பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : நான்குறிப்பிட்டது பத்து அடுக்கு கட்டடம் பற்றி. அதிலே கீழே கடைகளும், மற்றும் அலுவலகங் களும் இருக்கும். இப்போது அரசாங்க அலுவலகங்கள் பல வாடகைக்

கட்டடங்களில் இருந்து வருகின்றன. இது தவிர இன்னும் மூன்று திட்டங்களும் பரிசீலனையிலுள்ளன.

Three proposals costing Rs. 50 lakhs, Rs. 274 lakhs and Rs. 19·5 lakhs proposed by Industries Department, State Housing Board and State P.W.D. Department.

இப்படி நான்கு திட்டங்கள் பரிசீலனையில் இருக்கின்றன. எந்தத் திட்டம் முடிவாக எடுக்கப்படும் என்பது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பழவாறு நீர் இறைப்புத் திட்டம்.

* 347 வினா—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) மாயூரம் தொகுதி, தலைஞாயிறில் பழவாற்றில் "பம்ப்பிங் ஸ்கீம்" வேலை செய்து முடிக்கப்பட்டு விட்டதா ?

(இ) அதற்காகும் செலவுத் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இத்திட்ட வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

(இ) செலவு இப்போது ரூ. 2·64 லட்சமென மதிப்பிடப்பட்டிருக்கிறது.

திரு என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் இம்மாதிரித் திட்டங்கள் எங்கெங்கு நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதையும், அதற்கான எஸ்டிமேட் தொகை மொத்தமாக எவ்வளவு செலவழிக்கப்படுகிறது அரசாங்கத்தால் என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல கேள்விகளைப் போட்டு பழக்கப்பட்டவர்கள். மூலக் கேள்வி குறிப்பிட்ட ஒரு பணியைப் பற்றிய கேள்வியாகும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்தத் துணைக் கேள்விக்குப் பதில் சொல்ல இயலாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சர் அவர்களின் திட்டவட்டமான பதிலுக்காகப் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

துணைக் கேள்விகள் மூலக் கேள்விகளுக்குச் சம்பந்தப்பட்டதாக கேட்க வேண்டும்.